கடமைப்பட்டிருக்கின்றோம். அதேபோன்று, கள்ளர் சீரமைப்புக் கழகம் துவங்கி பல ஆண்டுகாலம் ஆகிவிட்டது. அப்போது கட்டிய பள்ளிக் கட்டிடங்கள் அனைத்தும் மிகவும் பழமையான கட்டிடங்களாக இருப்பதால், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் அனைத்துக்கும், குறிப்பாக உத்தமபாளையம் தாலுக்காவில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் இதே போன்று கூடுதல் கட்டிட வசதிகள் செய்து தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 140, டாக்டர் பெ. வீரபாண்டியன்; மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்.

*140–*

**செங்கம் தோக்கவாடியில் கதர் கிராமிய வாரியத்தின் மூலம் சோப்பு தயாரிக்கும் திட்டம்**

*14971–**டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் தோக்கவாடியில் உள்ள கதர் கிராமிய வாரியத்தின் வேப்ப எண்ணெய் உற்பத்தி மையத்தில் குளியல் சோப்பு தயாரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரில் தோக்கவாடி கிராமத்தில் கதர் கிராமிய வாரியத்தால் வேப்ப எண்ணெய் உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகிறது. இந்த இடத்திலிருந்துதான் தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கு வேப்ப எண்ணெய் அனுப்பப்பட்டு சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, தோக்கவாடி கிராமத்தில் அங்கேயே சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1994 ஜனவரி 3*]

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோக்கவாடியில் மட்டுமல்ல, சமயபுரம், நாகமலை புதுக்கோட்டை ஆகிய இடங்களிலேயும் வேப்பங்கொட்டையிலிருந்து வேப்ப எண்ணெய் எடுக்கும் ஆலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான எண்ணெய் சமயபுரத்தில் எடுக்கப்பட்டு தமிழகத்தில் மற்ற சோப்பு தயாரிக்கும் இடங்களுக்கு வேப்ப எண்ணெய்யானது விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, தோக்கவாடியிலே போதிய வசதி இல்லாத காரணத்தினால் இந்த சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோக்கவாடி கிராமம் முழுக்க முழுக்க ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் பகுதி. அங்கே இடம் அதிக அளவில் இருக்கிறது. எனவே, ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க ஒரு வாய்ப்பு இருப்பதால் மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, தோக்கவாடியில் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலையைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் மீண்டும் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் *11.05*

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோப்பு தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருள்களை உலர வைப்பதற்கும் பதப்படுத்துவதற்கும் தேவையான இடவசதி, காதி கதர் வாரியத்திற்குச் சொந்தமான கட்டிட வசதி போன்றவை தோக்கவாடியில் தற்போது இல்லை. தேவையைக் கருதி வரும் ஆண்டுகளில் அது பரிசீலிக்கப்படும்.

*125–*

## அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிகளுக்குப் பாதுகாப்பு

**20506*–**திரு. உ. பலராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**